வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 11.03.2026 புதன்கிழமை இதழ் : 65 பக்கங்கள் : 08

# சுதந்திர தினத்தன்று கறுப்புக் கொடி ஏற்றியமை; பல்கலையினுள் அதிரடியாக பாய்ந்தது பொலீஸ்!

## துணைவேந்தர், பதிவாளரிடம் வாக்குமூலங்கள் பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஒவ்வொரு வருடமும் இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதி, யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கக் கொடியை இறக்கி - அதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டு வரும் சம்பவங்கள் தொடர்பில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், பல்கலைக்கழகப் பதிவாளரும் நேற்று குற்றத்தடுப்புப் பொலீஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கொழும்பில் இருந்து வந்த விசேட உத்தரவின் பேரில் யாழ்ப்பாணம் பொலீஸ் பிரிவின் குற்றத்தடுப்புப் பணியக அதிகாரிகளே இந்த விசாரணையில் 07



## சி.ஐ.டி. முன்னாள் பணிப்பாளர் பிரசாத் ரணசிங்கவுக்கு பிணை

கொழும்பு, மார்ச் 11

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப் பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் 07

### அல்லைப்பிட்டிப் பகுதியில்

## பொலிஸாரின் சூட்டில் உயிரிழந்த சிறுவனுக்கு நீதி கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

அல்லைப்பிட்டியில் கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த 07



# இலங்கையின் கடல் எல்லைக்குள் ஈரான் கப்பல் தாக்கப்படவில்லை!

## அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

ஈரான் கப்பல் மீதான தாக்குதல் இலங்கையின் கடல் எல்லைக்குள் இடம்பெறவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் எமது நாட்டின் இறையாண்மைக்கு உட்பட்ட எல்லைக்குள் நிகழவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடல் மைல் கணக்கீட்டின்படி எமது நாட்டின் கடல் எல்லை மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயம் என்பவற்றை தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

எமது நாட்டின் இறையாண்மைக்கு உட்பட்ட கடல் எல்லை என்பது 12 கடல் 07



# 3 மாதங்களுக்குள் அறிக்கை கிடைத்தால் இவ்வருடம் மாகாண சபை தேர்தல் உறுதி

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள விசேட தெரிவுக்குழு, எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்குமாயின், இந்த ஆண்டுக்குள்ளேயே தேர்தலை நடத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நிலவும் இழுபறிகள் குறித்து ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுத் 07

## காலநிலைக்கு சீரமைவான விவசாய முறைமை வடக்கு மாகாணத்துக்கு கட்டாய தேவையாகும்!

### மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 11

எமது பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைமைக்குப் பெரும் சவாலாக மாறிவரும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய வகையில், "காலநிலைக்குச் சீரமைவான 07



## எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

மத்திய கிழக்கில் போரை அடுத்து ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்க, இயன்றவரை சிக்கனமாக 07

## மின்சார சபை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு தொடரும்!

கொழும்பு, மார்ச் 11

தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை தற்போதைய வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளதாக மின்சார ஊழியர் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

மின்சார சபை கலைக்கப்பட்டு புதிதாக நிறுவப்பட்ட நான்கு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளுக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் 07

## சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் யாழ்.மாவட்டத்திற்கு முன்னுரிமை

கொழும்பு, மார்ச் 11

இலங்கையின் சுற்றுலாத்துறை ஆற்றல்மிக்க இடங்களை அடையாளங்கண்டு, அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், 2026 - 2028 காலப்பகுதிக்கான விரிவான சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விசேட முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில், பேண்தகு சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக இந்தத் திட்டம் 07

## வடக்கில் மணல் விநியோகத்தை சீராக்குவதற்கு புதிய பொறிமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாணத்தில் மணல் மற்றும் கிரவல் விலைகளை கட்டுப்படுத்தி மக்களின் தேவைகளுக்கேற்ற விநியோகத்தை சீராக மேற்கொள்ள புதிய பொறிமுறையை உருவாக்கும் நோக்கில் விசேட உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நேற்று காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் சமன் ஜெயசிங்க உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# அடுத்த ஒன்றரை மாதங்களுக்குரிய உணவுப் பொருள்கள் கையிருப்பில்!

**பிரதி அமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன**

கொழும்பு, மார்ச் 11

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்களுக்கு மத்தியிலும், இலங்கையில் அடுத்த ஒன்றரை மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அரிசி, கோதுமை மா, சீனி மற்றும் பருப்பு வகைகள் தற்போது போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாகவும், இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விநியோகக் கட்டமைப்பில் இதுவரை எவ்வித தடைகளும் ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், சர்வதேச ரீதியில் நிலவும் பதற்றமான சூழலால் கப்பல் போக்குவரத்து ஒரு சில நாள்கள் தாமதமாகக் கூடும் என ஜனாதிபதி அண்மையில் எச்சரித்திருந்ததைச் சுட்டிக் காட்டிய பிரதி அமைச்சர், தற்போதைக்குத் தட்டுப்பாடு நிலவ வாய்ப்பில்லை எனவும் போர் நீண்ட காலம் தொடர்ந்தால் மட்டுமே அதன் பாதிப்புகள் குறித்துக் கூற முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச கப்பல் கட்டண அதிகரிப்பு மற்றும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் 5 முதல் 10 வீதம் வரை அதிகரித்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பல்கலை மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் 10,000 ரூபாவாக உயர்வு

கொழும்பு, மார்ச் 11

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான கொடுப்பனவுகள் நேற்று முதல் மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

இதுவரை 7,500 ரூபாவாக வழங்கப்பட்டு வந்த இக்கொடுப்பனவு, 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய 10,000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தகுதியுள்ள மாணவர்களுக்கான ஜனவரி மாதத்திற்குரிய 10,000 ரூபா கொடுப்பனவு நேற்று முதல் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. (அ)

# சைவ ஆலயத்தின் சிலை உடைப்பு சந்தேகநபர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரவணை பகுதியில் உள்ள சைவ ஆலயம் ஒன்றின் சிலையானது நேற்று முன்தினம் இரவு உடைத்து சேதமாக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்துறை பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை உடனடியாக கைது செய்தனர்.

அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# யாழில் உள்ள பள்ளிவாசலுக்குள் வாளுடன் சென்றவரால் பரபரப்பு!




யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு தொழுகை இடம் பெறும்போது, வாள் முனையில் ஒருவரை துரத்திச் சென்றதால் பரபரப்பு ஏற்பாட்டது.

ஓட்டுமடம் சந்தியில் இருந்து வட்டுக்கோட்டை செல்லும் வழியில் உள்ள பள்ளி வாசல் ஒன்றில் நேற்று முன்தி னம் இரவு தொழுகை இடம்பெற்றது.

இதன்போது வாளேந்திய நபர் ஒருவர் இன்னொரு இளைஞரை துரத்திக்கொண்டு சென்றவேளை, குறித்த இளைஞர் பள்ளிவாசலுக்குள் புகுந்து அங்குள்ள மதிலால் ஏறி தப்பிச் சென்றுள்ளார்.

இதன்போது வாளுடன் வந்த சந்தேக நபர், பள்ளிவாசலில் இருந்த இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, வாள் பறிமுதல் செய்யப்பட்டது. இதன்போது வாளைக் கொண்டு வந்த குறித்த சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-05)

# கோட்டாவிடம் 17 ஆம் திகதி விசாரணை

கொழும்பு, மார்ச் 11

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் எதிர்வரும் 17 ஆம் திகதி விசாரணைக்காக ஆஜராகவுள்ளார்.

ஏற்கனவே அவரை விசாரணைக்காக ஆணைக்குழு அழைத்திருந்தபோதும், சிங்கப்பூர் செல்வதால் தம்மால் வரமுடியாதென கோட்டாபய எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

17 ஆம் திகதி ஆஜராகும் கோட்டபாயவிடம் சாட்சியம் பதிவு செய்யப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மாற்று பாதையை கையாளும் சிறிலங்கன் எயார்லைன்ஸ்!

கொழும்பு, மார்ச் 11

மத்திய கிழக்கு வான்வெளி மூடப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய விமான நிறுவனமான சிறீலங்கன் எயார்லைன்ஸ், அதன் ஐரோப்பிய இடங்களுக்கு ஆப்கானிஸ்தான் மற்றும் அசர்பைஜான் வழியாக மாற்று வழியை ஏற்றுக்கொண்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலிய தாக்குதலுடன் தொடங்கிய விரிவடையும் மோதல் காரணமாக மத்திய கிழக்கில் வான்வெளி பெரும்பாலும் மூடப்பட்டே உள்ளது.

ஈரான் இப்பகுதியில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இப்பகுதிக்கு செல்லும் மற்றும் இப்பகுதி வழியாக விமான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

குறிப்பாக பாதை மாற்றத்தின் காரணமாக லண்டனுக்கு விமானப் பயணம் ஒன்றரை மணி நேரம் அதிகரித்துள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகமும் தலைமை நிர்வாக அதிகாரியுமான கப்டன் தமிந்த ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

வான்வெளி மூடப்பட்டதன் விளைவாக மத்திய கிழக்கு நகரங்களுக்கு திட்டமிடப்படாத விமானங்கள் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே இயக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

# பாடசாலையில் மதிய உணவு பிரச்னை; வலிகாம் வலயப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவில் பிரச்னை இருப்பதாக தெரிவித்து சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் இது தொடர்பில் வலிகாமம் கல்வி வலய பணிப்பாளரை தொடர்பு கொண்டு வினவியபோது-

குறித்த சம்பவம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகின. இது குறித்து பாடசாலை நிர்வாகத்தினரிடம் விசாரணைகளை மேற்கொண்டு அதன் அறிக்கையை ஆளுநர் உள்ளிட்ட தரப்பினருக்கு அனுப்பியுள்ளேன். அந்த விடயம் இது வரை உறுதிப்படுத்தப்படவில்லை- என்றார். (அ-05)

# உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரைவில் பலமான புதிய அதிகாரசபை



கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபையைப் போன்றதொரு பலமான புதிய அதிகார சபையை நிறுவுவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாகச் சுகாதாரப் பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பல அமைச்சுக்கள் செயல்பட்ட போதிலும், உணவின் தரத்தைப் பரிசோதிப்பதற்கான தொழில்நுட்ப அறிவும், சட்ட விதிகளும் தற்போது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக, உணவுகளில் கலக்கப்படும் அப்லாடாக்சின், உரங்களில் உள்ள இரசாயனங்கள், பார உலோகங்கள் மற்றும் மைக்ரோ பிளாஸ்ரிக் போன்ற அபாயகரமான பொருட்கள் குறித்துப் பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லை எனத் தெரிவித்த அவர், இவற்றை முறையாகக் கண்காணிக்கத் தரவுத் தொகுப்புடன் கூடிய பொறிமுறை ஒன்று அவசியம் எனவும் குறிப்பிட்டார். (அ)

# ஆழ்கடலில் ஆயுதங்களுடன் மீன்பிடிப் படகொன்று மீட்பு!

கொழும்பு, மார்ச் 11

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கை ஒன்றின்போது இலங்கைக்கு தெற்கே உள்ள ஆழ்கடல் பகுதியில் போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் பொதிகள் மற்றும் ஆயுதங்களை ஏற்றிச் சென்ற பல நெடுநாள் மீன்பிடி படகொன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த இந்த படகை சோதனையிட்ட போதே இந்த சட்டவிரோத பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன.

தற்போது குறித்த படகு மற்றும் அதிலிருந்த பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காகவும், சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காகவும் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# கச்சாய் மகாவித்தியாலய மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 11

கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று புதன்கிழமை பி. ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பதில் அதிபர் ந.கிருபாகரன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய கல்வி நிர்வாக பிரதி கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய விவசாய பாட வளவாளர் ந.நவாஞ்சனும், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர்கள் பொ.செல்லப்பா, ர.விஜயகுமாரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.03.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# காட்டுமிராண்டித்தனம் என்பதை விட இதை வேறு எவ்வாறு கூறுவது?

அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதலில் பலியான ஈரானிய அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி காமெனியின் இடத்துக்கு புதிய தலைவரை தெரிவு செய்திருப்பதாக ஈரானிய நிபுணர்கள் சபை ஞாயிறன்று அறிவித்த போதிலும், பெயரை இன்னமும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

ஈரானின் தலைவராக காமெனியின் பெயர் தொடரும் என்று நிபுணர்கள் சபையின் உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டி ஈரானிய “மெஹ்ர்” செய்திச்சேவை அறிவித்திருக்கிறது. இதன் மூலம் புதிய ஆன்மீகத் தலைவராக கொலையுண்ட தலைவரின் மகன் மொஜ்தாபா காமெனியே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

இந்த தெரிவு அமெரிக்காவையும் மேற்குலகையும் எதிர்த்து நிற்பதில் ஈரான் தொடர்ந்தும் உறுதியாக இருக்கிறது என்பதை வெளிக்காட்டுகிறது. அறிவிப்பு வெளியானதும் தலைநகர் தெஹ்ரானில் வீதிகளில் இறங்கிய மக்கள் “ஆண்டவர் எங்களுடன் இருக்கிறார், காமெனியே இனிமேலும் எமது தலைவர் “ என்று முழக்கங்களை எழுப்பினார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது அங்கீகாரமின்றி தெரிவாகும் ஈரானின் அடுத்த ஆன்மீகத் தலைவர் நீண்ட காலம் இருக்க மாட்டார் என்று உடனடியாகவே எச்சரிக்கை செய்தார். அதேவேளை, இஸ்ரேல் புதிய தலைவராக தெரிவு தெரிவானவரையும் தெரிவை உறுதிப்படுத்திய நிபுணர்கள் சபையின் உறுப்பினர்களையும் இலக்குவைக்கத் தனது படைகள் தயங்கப் போவதில்லை என்று இஸ்ரேல் கூறியது.

புதிய தலைவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ரஷ்ய ஜனாதிபதி புட்டின், மொஜ்தாபா தனது தந்தையாரின் பணிகளை கௌரவத்துடன் தொடர்ந்து முன்னெடுத்து சோதனைகளுக்கு மத்தியில் ஈரானிய மக்களை ஐக்கியப்படுத்துவார் கூறியிருக்கிறார். ரஷ்யா ஈரானின் பக்கம் தொடர்ந்தும் உறுதியாக நிற்கும் என்றும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

அதேவேளை, புதிய ஆன்மீகத் தலைவரைத் தெரிவு செய்வது என்பது முற்றிலும் ஈரானின் உள்விவகாரம் என்று கூறியிருக்கும் சீனா, அவரை இலக்கு வைப்பதற்கான எந்த முயற்சியையும் எதிர்க்கும் என்று அறிவித்திருக்கிறது.

தனது விருப்பத்துக்குரிய தலைவரைத் தவிர வேறு எவரும் ஈரானை ஆட்சி செய்ய முடியாது என்று ட்ரம்ப் எடுத்திருக்கும் கடைக்கோடி கர்வத்தனமான நிலைப்பாடு சர்வதேச அரங்கில் சட்டத்தின் ஆட்சியை கேலி செய்வதாகவும் ஜனநாயக விழும்பியங்களை காலில் போட்டு மிதிப்பதாகவும் இருக்கிறது.

ஏற்கெனவே ஜனவரியில் வெனிசூலா ஜனாதிபதி மதுரோவை நியூயோர்கிற்கு அமெரிக்கப் படைகள் கடத்திச் சென்றன. பத்து நாட்களுக்கு முன்னர் அயதுல்லா காமெனி குண்டுவீசிக் கொல்லப்பட்டார். அவருக்கு பிறகு தனது அங்கீகாரமின்றி ஆன்மீகத் தலைவராக வருபவரும் நீண்டகாலம் உயிர்வாழப் போவதில்லை என்று “கொலை அச்சுறுத்தலை” ட்ரம்ப் விடுத்திருக்கிறார்.

தனது விருப்பத்துக்கு ஏற்றதாக் நடக்காத எந்த நாட்டின் தலைவரையும் கொலை செய்யமுடியும் என்ற அர்த்தம் டரம்ப்பின் நிலைப்பாட்டில் வெளிப்படுகிறது. இது விலங்குகள் பலவீனமான வேறு விலங்குகளைக் கொன்று புசித்து உயிர். வாழும் காட்டுமிராண்டிக் குணத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பது விளங்கவில்லை.

# போர் எப்போது முடியும் என்பதை நாங்கள் தான் தீர்மானிப்போம்

## ட்ரம்ப்புக்கு ஈரான் பதிலடி

*தெஹ்ரான், மார்ச். 11*

ஈரான் போர் முடிவுக்கு வருவது குறித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கருத்துக்கு ஈரான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய இலக்குகள் மீதான இராணுவ நடவடிக்கைகளை எப்போது நிறுத்துவது என்பதை நாங்களே தீர்மானிப்போம் என ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் மிக விரைவில் முடிவுக்கு வரும் எனத் தெரிவித்திருந்தார்.

புதிய கடும்போக்குவாத உச்சநிலைத் தலைவரை தெரிவு செய்துள்ள ஈரான், உலகளாவிய எண்ணெய் விநியோகத்தைத் தடுத்தால் போர்தீவிரமடையக்கூடும் என்றும் ட்ரம்ப் எச்சரித்திருந்தார். இருப்பினும், இதற்குப் பதிலளித்துள்ள ஈரான், போரை முடிவுக்கு கொண்டு வரும் முடிவைத் நாங்களே எடுப்போம்.

பிராந்தியத்தின் எதிர்காலம் தற்போது தெஹ்ரானின் படைகளின் கைகளிலேயே உள்ளது என ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. (எ)

# இஸ்ரேல் மீது கொத்து குண்டுகள் வீசும் ஈரான்

*டெல்அவிவ், மார்ச். 11*

இஸ்ரேலின் டெல் அவிவ் உள்ளிட்ட நகரங்களை குறிவைத்து ஈரான் இராணுவம் அடுக்கடுக்காக கொத்து குண்டுகளை வீசி வருகிறது. சுமார் 8 மீற்றர் பரப்பளவுக்கு இந்த கொத்து குண்டுகள் சிதறி விழுந்து வெடிக்கின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் மற்றும் ஈரான் இடையே 11 ஆவது நாளாக நேற்றும் போர் நீடித்தது. ஈரானுக்கு ஆதரவாக லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா கிளர்ச்சிப் படை இஸ்ரேலை குறிவைத்து ஏவுகணைகளை வீசி வருகிறது. இதற்கு பதிலடியாக வான், தரைவழியாக லெபனான் மீது இஸ்ரேல் இராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரேலின் இராணுவ தலைமையகமான டெல் அவிவ் மற்றும் முக்கிய இராணுவத் தளங்கள், பல்வேறு நகரங்களை குறிவைத்து ஈரான் இராணுவம் தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது. வான்வழி தாக்குதலை முறியடிக்க இஸ்ரேல் இராணுவம் சார்பில் அயர்ன் டோம் மற்றும் சி டோம் பாதுகாப்பு கவச அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இதனையும் மீறி ஈரான் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. (எ)

# கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி

*கொழும்பு, மார்ச். 11*

ஆசியாவில் நேற்று அதிகாலை கச்சா எண்ணெய் விலைகள் சரிந்தன.

பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை சுமார் 8.5 சதவீதம் சரிந்தது.

அமெரிக்காவிலும் கச்சா எண்ணெய் விலை சுமார் 9 சதவீதம் சரிந்தது. இருப்பினும், மோதல் தொடங்கிய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த விலைகள் இன்னும் சுமார் 30 சதவீதம் அதிக மாகவே உள்ளன.

போர் மிக விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்த கருத்துக்களை தொடர்ந்தே இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆசிய பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் வளைகுடா நாடுகளின் முக்கிய வாடிக்கையாளர்களாக இருப்பதால், கச்சா எண்ணெய் விலையேற்றத்தால் ஆசிய சந்தைக் குறியீடுகள் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்தன. (எ)

# லெபனானில் உக்கிரமடையும் போர்: ஏழு இலட்சம் மக்கள் இடம்பெயர்வு!

*பெய்ரூட், மார்ச். 11*


இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினரிடையே லெபனானில் இடம்பெற்று வரும் உக்கிரமான போர் காரணமாக இதுவரை சுமார் ஏழு இலட்சம் பேர் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லெபனானின் சமூக விவகார அமைச்சர் ஹனீன் சையத் இது குறித்து தெரிவிக்கையில், இடம்பெயர்ந்த மக்களுக்காக அரசாங்கத்தால் இதுவரை 560 தற்காலிக தங்குமிடங்கள் மற்றும் நிவாரண முகாம்கள் திறந்து விடப்பட்டுள்ளன. போர் தீவிரமடைந்து வருவதால் இடம்பெயர்பவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஈரானின் முன்னாள் உச்சத் தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை முன்னெடுத்தனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் லெபனான் மீது பாரிய வான்வழி மற்றும் தரைவழித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளமையே இந்த பாரிய இடப்பெயர்வுக்குக் காரணமாகும். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்

**இடபம்:** அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**கடகம்:** திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்:** உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி:** கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**துலாம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக்கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடிலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும்.

**தனுசு:** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மகரம்:** உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு . உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்:** கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

**மீனம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்சினை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

# யாழில் இணையம்மூலம் பணம் திருட்டு! மக்களுக்கான விழிப்புணர்வு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 11

அஸ்வெசும பயனாளிகளிடம் அநாமதேய தொலைபேசி அழைப்பு எடுத்து தங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. தங்கள் தொலைபேசி இலக்கத்துக்கு வரும் OTP இலக்கத்தினை தெரிவிக்குமாறு கோருகின்றார்கள். அதன் உண்மைத் தன்மை அறியாத சில பொது மக்கள் தொலைபேசிக்கு வரும் OTP இலக்கத்தினை தெரியப்படுத்துவதன் மூலம் அவர்களுக்குரிய வங்கி கணக்கிலிருந்து இணையம்மூலம் பணம் திருடப்படுகின்றன.

எனவே, இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் தமது தொலைபேசி இலக்கத்துக்கு வரும் மூவீ இலக்கத்தினை ஏனையவர்களுக்கு பகிர்வதனை தவிர்க்குமாறும் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

(எ)

# பகல் கனவிலிருந்து மீண்டு வந்த சஜித் தற்போது ஆட்சியை தரக்கோருகிறார்

## ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, மார்ச். 11

மீண்டும் ஒருமுறை சஜித் பிரேமதாஸ பகல் கனவிலிருந்து மீண்டு வந்து ஆட்சியை தன்னிடம் தருமாறு கோருகிறார் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தியினுடைய பெண்கள் மாநாடு, கொழும்பில் நடைபெற்றிருந்தது. அரசாங்கம் என்ற ரீதியில் மக்கள் எம்பக்கம் தான் இருக்கின்றார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை நாங்கள் நிரூபித்திருக்கின்றோம்.

குறிப்பாக வடமாகாணத்தில் இருந்து பாரியளவிலான பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். அந்தவகையிலே வடக்கு கிழக்கிலே அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை மற்றும் ஆதரவு அடிப்படையாக அதிகரிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

மேலும், ஏனைய இடங்களில் சில கட்சிகள் நடத்திய மாநாட்டிலே குறிப்பிட்ட சிலரை வைத்து நடத்தியிருப்பதை அவதானிக்க முடிந்தது. அத்தோடு, எமது மாநாடு எதிர்க்கட்சிகளின் போலியான பிரசாரங்களை தகர்த்தெறிந்திருக்கின்றது."- என்றார்.

(எ-10)

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க நெல்லியடி பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 11

சட்டவிரோதமாக மணல் அகழும் வாகனங்களை நெல்லியடி பொலிஸார் துரத்தி செல்லும் காட்சிகள் வெளியாகின.

வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதால் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் நெல்லியடி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், மண் கடத்தல் காரர் சிறிய ரக வாகனத்துடன் தப்பிச் செல்ல முற்பட்டவேளை அதனை நீண்ட தூரம் இரண்டு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்ற காட்சி தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

நெல்லியடி பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் தற்போது கள்ளமண் ஏற்றுதல் ஓரளவு குறைந்துள்ளது என்று மக்கள் கூறினர். இதேவேளை, வடமராட்சி கிழக்கில் தற்போது இரண்டு டிப்பர்கள் தலா 4 தடவைகள் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

(எ-08)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 11

தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 48 நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "திருவாதவூர் அடிகளுக்கு உபதேசித்த படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# சிறார்களின் கால்கோள் விழா



யாழ்ப்பாணம், மார்ச். 11

கொடிகாமம் ஐங்கரன் முன்பள்ளி சிறார்களின் கால்கோள் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், சாவகச்சேரி பிரதேச சபையின் பதில் தவிசாளர் இரா. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

(எ)

# போதைப்பொருட்களுடன் யாழில் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச். 11

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு போதைப்பொருட்களை கொண்டு வந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

630 போதை மாத்திரைகளும் 5 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்டன.

(எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு, கம்பஹாவின் சில பகுதிகளில் மின் தடை

கொழும்பு, மார்ச்.11

கொழும்பு 9, 14 மற்றும் கம்பஹாவின் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

மின்சார தொழிற்சங்கங்களின் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, இந்த மின் தடைகளை வழமைக்கு கொண்டு வருவதற்கு சற்று காலதாமதம் ஏற்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைத்த பின்னர் நிறுவப்பட்ட புதிய நிறுவனங்களுக்கு ஊழியர்களை இணைக்கும் போது முறையான நியமனக் கடிதங்களை வழங்காமை உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் பிற்பகல் 03.00 மணிக்குத் தொடங்கியது.

தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்காவிடில், தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தப் போவதாக இலங்கை மின்சார சபை தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க அறிவித்துள்ளார். (எ)

## பாடசாலை போக்குவரத்து கட்டணம் நேற்று முதல் 5 வீதத்தால் அதிகரிப்பு

### "தூங்கி எழுந்திருக்கும் போது எரிபொருள் விலை உயர்வு"

கொழும்பு, மார்ச். 11

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் கட்டணங்களை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 5 வீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் லலித் சந்திர சிறி பெர்னாண்டோ இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "இதற்கு முன்னர் பலமுறை எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு போக்குவரத்து கட்டணங்களில் மாற்றம் செய்யவில்லை.

இருப்பினும், இம்முறை டீசல் விலை 22 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதால், போக்குவரத்து கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனைய சங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி, குறித்த கட்டண திருத்தம் உடன் முதல் அமுலுக்கு வருகிறது.

தூங்கி எழுந்திருக்கும் போது திடீரென எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எமது போக்குவரத்து சங்கம் என்ற ரீதியில் கட்டணத்தை 5 வீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளோம். இதன்படி, ஒரு பாடசாலை மாணவருக்கான கட்டணம் 10, 000 ரூபாவாக இருந்தால், அது 500 ரூபாயால் அதிகரிக்கும். ஒரு லீற்றர் டீசல் 22 ரூபாய் விலை அதிகரிப்பானது போக்குவரத்து துறையில் எமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. விருப்பம் இல்லாவிட்டாலும் இந்த முடிவை எடுக்க வேண்டியதாயிற்று"- என்றார். (எ)

## ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 11

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது, 100 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு இரத்மலானை பகுதியில் சுற்றிவளைப்பு தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததாக கருதப்படும் 100 கிராம் ஐஸ் போதைப்பொருள் குறித்த சந்தேக நபரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டது. (எ)

## பிரிட்டன் பிரஜை ரயில் மோதி பலி

களுத்துறை, மார்ச். 11

களுத்துறை - பிங்வத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தல்பிட்டிய பாலத்துக்கு அருகில் ரயில் மோதி நால்வர் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இந்தச் சம்பவம் பதிவானது.

பெலியத்தையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த அதிவேக ரயில் மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்தது.

விபத்தில் உயிரிழந்தவர் 87 வயது பிரித்தானிய நாட்டு பிரஜை என அடையாளம் காணப்பட்டார்.

வெளிநாட்டு தம்பதியினர், ஒரு இலங்கையர் மற்றும் அவரது குழந்தை ஆகிய நால்வரே இவ்வாறு விபத்துக்குள்ளாகினர்.

இவர்கள் ரயில் தண்டவாளத்தில் நின்று படம் எடுக்க முயன்ற போதே இந்த விபத்து நேர்ந்தது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த ஏனைய மூவரும் பாணந்துறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (எ)

## ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச் சூடு: மற்றுமொரு சந்தேகநபர் கைது

கொழும்பு, மார்ச். 11

கடந்த ஜனவரி 16ஆம் திகதி ஜிந்துப்பிட்டி பகுதியில் நபரொருவரை சுட்டுக்கொலை செய்து, இரண்டு சிறுவர்களைக் காயப்படுத்திய குற்றச்செயலுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு மத்திய குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த சந்தேகநபர் உடவலவ பகுதியில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு துப்பாக்கிதாரி கடந்த 03ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். (எ)

## டீசல் விலை உயர்ந்த போதிலும் பஸ் கட்டணத்தில் மாற்றமில்லை

கொழும்பு, மார்ச். 11

டீசல் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் டீசல் விலை உயர்ந்த போதிலும், அது பஸ் கட்டண திருத்தத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று அதன் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவித்தார்.

இதன் காரணமாக தற்போதைய கட்டணங்களே அவ்வாறே நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு லீற்றர் ஒட்டோ டீசலை 22 ரூபாயினாலும், ஒரு லீற்றர் லங்கா சுப்பர் டீசலை 24 ரூபாயினாலும் அதிகரிக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## விபச்சார விடுதி முற்றுகை 7 சந்தேகநபர்கள் கைது!

கம்பஹா, மார்ச். 11

சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்கொழும்பு வீதிப் பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதி சுற்றிவளைக்கப்பட்டதுடன், 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை சீதுவை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விபச்சார விடுதியை நிர்வகித்த குற்றச்சாட்டில் ஒரு ஆணும், விபச்சாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 06 பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் 25 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள்மடம் மனிதப்புதைகுழியில் அகழ்வு பணி 30ஆம் திகதி ஆரம்பம்

மட்டக்களப்பு, மார்ச். 11
கடந்த 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற குருக்கள்மடம் படுகொலைச் சம்பவம் தொடர்பான மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள், எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

1990ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரையை முடித்துவிட்டு, கல்முனை வழியாக காத்தான்குடிக்கு வாகனங்களில் பயணித்த முஸ்லிம் யாத்திரிகர்கள், மட்டக்களப்பு - குருக்கள்மடம் பகுதியில் வைத்து ஆயுததாரிகளால் மறிக்கப்பட்டனர். அவ்வாறு கடத்தப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு, அப்பகுதியிலேயே புதைக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு நீண்டகாலமாக நிலவி வருகின்றது.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான இந்த விவகாரம், பாதிக்கப்பட்ட குடும்பங்களினால் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் தற்போது பாரிய திருப்பத்தை எட்டியுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை திங்கட்கிழமை களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த அகழ்வுப் பணிக்காக ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நிதி விடுவிப்பில் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக பணிகள் ஆரம்பிக்கப்படாமல் இருந்தன. தற்போது நிலவும் சாதகமான காலநிலையை கருத்தில்கொண்டும், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு நிதி அதிகாரங்கள் வழங்கப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 30ஆம் திகதி அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# பிள்ளையான் தாக்கல் செய்த மனு: 18ஆம் திகதி விசாரணைக்கு வரும்

கொழும்பு, மார்ச். 11
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை மார்ச் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களம் தன்னை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் போதுமான காரணமின்றி கைது செய்து தடுத்து வைத்துள்ளது எனக் கூறி அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு திங்கட்கிழமை உயர் நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மூவர் கொண்ட நீதியரசர்கள் குழாம், மனுவை விசாரணைக்காக எதிர்வரும் 13 மற்றும் 18 ஆகிய திகதிகளில் மீண்டும் அழைக்குமாறு உத்தரவிட்டது.

இந்த மனுவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்ட மா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# நிந்தவூர் பிரதேச சபை மக்கள் காங்கிரஸ் வசம்

நிந்தவூர், மார்ச். 11
நிந்தவூர் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றியது. புதிய தவிசாளராக நியாஸ் ஆதம் தெரிவானார்.

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த அமர்வில் நியாஸ் ஆதம் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் நிந்தவூர் பிரதேச சபையின் நிர்வாகத்தை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றியது. (எ)

# திருகோணமலையில் மழை பெய்யக்கூடும்

கொழும்பு, மார்ச். 11
திருகோணமலை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் சீரான வானிலை நிலவக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை, அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

காங்கேசன்துறை தொடக்கம் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும்.

நாட்டைச் சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களில் சீரான வானிலை காணப்படும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை, பொத்துவில், அம்பாந்தோட்டை ஊடாக காலி வரையான கடல் பிராந்தியங்களில் கிழக்கு திசையில் இருந்து வடகிழக்குத் திசையை நோக்கியும் நாட்டைச் சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களில் மாறுபட்ட திசைகளில் இருந்தும் காற்று வீசும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 551 பேர் கைது

கொழும்பு, மார்ச். 11
நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 551 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

அத்துடன் 30, 835 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 21 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 261 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 150 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 183 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 45 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,368 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (எ)

# கஞ்சா தோட்டம் முற்றுகை

மொனராகலை, மார்ச். 11
எத்திமலை - கொட்டியாகலை, கெபிலித்த பகுதியில் நேற்று முன்தினம் கஞ்சா தோட்டம் சுற்றிவளைக்கப்பட்டது. அத்தோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் எத்திமலை பொலிஸ் நிலைய அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சோதனையின் போதே இந்த கஞ்சா தோட்டம் சுற்றிவளைக் கப்பட்டது.

இதன்போது, சுமார் 02 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா தோட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 06 அடி 10 அங்குல உயரம் வரை வளர்ந்திருந்த 55, 220 கஞ்சா செடிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (எ)

# பாதுகாப்பு பொறிமுறைகள் குறித்து உதாசீனப் போக்குடன் அரசாங்கம்

**ஐக்கிய மக்கள் சக்தி விசனம்**



கொழும்பு, மார்ச்.11
பொருளாதார ரீதியில் சர்வதேசத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய பாதுகாப்பு பொறிமுறைகள் குறித்து அரசாங்கம் உதாசீனப் போக்குடன் செயல்படுகிறது. தற்போது சர்வதேசத்துடன் இது குறித்த பேச்சுவார்த்தைகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சர்வதேச மாநாடுகளுக்குச் சென்று நகைச்சுவையாளர்க ளாகியிருக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"ஒரு நாடு என்ற ரீதியில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலை விரும்பியோ விரும்பாமலோ எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 100 டொலரை விட அதிகரித்துள்ளது.

ஒரு புறத்தில் இது எமது நாட்டின் பொருளாதாரத்தில் நேரடியாக தாக்கம் செலுத்தும், மத்திய கிழக்கில் மாத்திரம் 10 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது."- என்றார்.

# "அனைத்து தாக்குதல்களும் உடன் நிறுத்தப்பட வேண்டும்"

கொழும்பு, மார்ச். 11
அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படையினரால் ஈரானில் நடத்தப்படும் அனைத்து மிலேச்சத்தனமான தாக்குதல்களும் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்று வரும் இந்த யுத்தம் காரணமாக உலக நாடுகள் பலவற்றிலும் பல்வேறுபட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் தோன்றியுள்ளன. இதனால், அப்பாவி மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

இதேநேரம் சவூதி அரேபியா, கட்டார், உள்ளிட்ட ஏனைய அரபு நாடுகள் மீது ஈரான் நடத்தும் தாக்குதல்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை கண்டிக்கத்தக்கதாகும். பஹ்ரைன், ஜோர்தான்,டுபாய், குவைத், அபுதாபி ,ஓமான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளும் இப்போரினால் பாதிக்கப்பட்டுள்ளன.

உலகெங்கிலும் இருந்து தொழிலுக்காக சென்ற இலட்சக் கணக்கான மக்கள் அங்கே பணியாற்றி வருவதோடு, இரண்டு புனிதத் தலங்களையும் கருத்தில் கொண்டு ஈரான் செயல்பட வேண்டும்.- என்றார். (எ)

# நெடுங்கமுவ விஜய ராஜா யானையின் உடற்பாகங்கள் மக்கள் பார்வைக்கு

கண்டி, மார்ச். 11
கண்டி சிறீ தலதா மாளிகையில் பாதுகாக்கப்படும் புத்தரின் புனித பல் வைக்கப்பட்டுள்ள ஏழு அடுக்கு பேழையை 16 ஆண்டுகளுக்கும் மேலாக சுமந்து சென்ற நெடுங்கமுவ விஜய ராஜா யானையின் பாதுகாக்கப்பட்ட உடற் பாகங்கள், கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் இன்று புதன்கிழமை முதல் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

ஆசியாவிலேயே மிக உயரமான தந்தங்களைக் கொண்ட யானையாகக் கருதப்பட்ட நெடுங்கமுவ விஜய ராஜா, 2022ஆம் ஆண்டும மார்ச் மாதம் 07ஆம் திகதி உயிரிழந்தது.

இதன் மறைவைத் தொடர்ந்து, அதன் உரிமையாளர் ஹர்ஷ தர்மவிஜய விடுத்த வேண்டுகோளுக்கமைய, இந்த யானையின் உடற் பாகங்கள் ஒரு தேசிய பாரம்பரிய சின்னமாகப் பாதுகாக்கும் பொறுப்பை சிறீ தலதா மாளிகை மற்றும் இலங்கையின் தேசிய அருங்காட்சியகத் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்றுக்கொண்டன.

யானை உயிரிழந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் பாதுகாக்கப்பட்ட உடல் பாகங்கள் இப்போது உத்தியோகபூர்வமாக கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர...

ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய ஆண்டுகளில் இடம்பெற்ற கொடி இறக்கல் சம்பவங்கள் தொடர்பாகச் சுமார் 3 மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸ் அதிகாரிகள், துணைவேந்தர், பதிவாளர் ஆகிய இருவரிடமும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர். பல்கலைக்கழகத்தில் இருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட அறிக்கைகள், ஆதாரங்கள் மற்றும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலே நேற்றைய விசாரணை இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

ஒவ்வொரு முறையும் சம்பவத்தை நேரில் கண்ட, தமது தொலைபேசிகளில் காணொலிப் பதிவு செய்த பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மாணவர்களிடம் இன்று வாக்குமூலம் பதிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொலீஸ் குற்றத்தடுப்பு பணியக வாகனம் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்துக்குள் வந்து, அதிகாரிகள் பதிவாளர் அலுவலகத்தில் நீண்ட நேரமாக வாக்குமூலம் பதிவு செய்து சென்றுள்ளமை மாணவர்கள் மத்தியில் தேவையற்றதொரு பீதியை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களிடையே கடும் பதற்றம் காணப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் சுதந்திர தினத்தன்று ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை இறக்கி, அக் கம்பத்தில் கறுப்புக் கொடியை ஏற்றிய சம்பவம் பாதுகாப்புத் தரப்பினருக்குப் பெரும் சவாலாக அமைந்திருந்த நிலையில், கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இது தொடர்பில் இறுக்கமான நடவடிக்கைகளை எடுப்பதென்று முடிவு செய்திருந்தது.

முன்னைய ஆண்டுகளிலும் ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடியை இறக்கி - அதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, அந்தத் தேச விரோதச் செயலில் ஈடுபட்டவர்கள் பற்றிய விவரங்களைப் புகைப்பட ஆதாரங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்திருந்த போதிலும் பல்கலைக்கழகம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும், அதேபோல இவ்வருடமும் அதே சம்பவம் இடம்பெற்றிருப்பதனால், பல்கலைக்கழகம் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது என்ன நடவடிக்கைகளை எடுத்தது? எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கடந்த மாதம் 11ஆம் திகதி பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையில், பல்கலைக்கழகத்தின் இன நல்லிணக்கப் பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர் ஒருவரையும், மாணவ ஒழுக்காற்று அதிகாரி ஒருவரையும், பிரதம பாதுகாப்பு அதிகாரியையும் உள்ளடக்கிய விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அவ் விசாரணைக்குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் தேசிய புலனாய்வு முகவராண்மையினால் சமர்ப்பிக்கப்பட்ட வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களின் அடிப்படையிலும் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடைய இரண்டு மாணவர்கள் அடங்கலாக இரு மாணவிகள் மற்றும் 28 மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படக் கூடும் என்று கடந்த வாரமே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஈழநாடு பிரதான தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ)

## பொலிஸாரின்...

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபரு மான பிரசாத் ரணசிங்கவுக்கு பிணையில் செல்ல கொழு ம்பு நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சிறுவனுக்கு நீதி வேண்டி நேற்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

மனித உரிமை ஆர்வலர் அமைப்பினரால் முனெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் கலந்துகொண்ட சிறுவனின் உறவுகள் பொலிஸாருக்கு எதிரான கோசங்கள் தாங்கிய பதாகைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் ஊர்காவற்றுறை நீதிமன்றின் முன்பாக முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமானது.

போராட்டம் ஆரம்பமான சில நிமிடங்களில் நீதிமன்ற பொலிஸாரால் நீதுமன்றுக்கு முன்பாக போராட்டம் நடத்த முடியாது எனக் கூறி நீதிமன்ற வளாகத்தை கடந்து போராட்டத்தை முன்னெடுக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

பொலிஸாரின் கோரிக்கையை ஏற்ற போராட்டக்காரர்கள், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் முன்பாக ஒன்றுகூடி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (அ)

## எரிபொருளை...

எரிபொருளை பயன்படுத்துமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் டி.ஜே. ராஜகருணா பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊடகங்கள் மத்தியில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் பயன்பாட்டை இயன்றவரை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சத்தில் கடந்த சில நாள்களாக மக்கள் அதிகமாக எரிபொருளை கொள்வனவு செய்துள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடானது இந்த விலை உயர்வுக்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது நடக்கவில்லை என்றால், இந்த மாத இறுதி வரை இருந்த விலையில் எரிபொருளை வாங்க முடிந்திருக்கும்.

இருப்பினும், தற்போதைய எரிபொருள் நெருக்கடி முழு உலகையும் பாதித்து வருகிறது.

கூட்டு நடவடிக்கை எடுக்காவிட்டால் கடுமையான ஆபத்துகளை எதிர்கொள்ள நேரிடும்-என்றார். (அ)

## மின்சார சபை...

எடுக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு குறித்து மின்சார தொழில்நுட்ப பொறியியலாளர் மற்றும் அதிகார சபையின் உப தலைவர் நந்தன உதயகுமார கருத்துத் தெரிவிக்கையில்:

மின்சார சபை கலைக்கப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்ட புதிய நிறுவனங்களின் நிர்வாகத்திற்கும், ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கூட்டு ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திடுவது உள்ளிட்ட 8 பிரதான கோரிக்கைகளை முன்வைத்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்தோம். இன்றைய பேச்சுவார்த்தையில் எமது முன்மொழிவுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

எனினும், எமது 6 முக்கிய கோரிக்கைகள் தொடர்பில் தம்மால் தெளிவான பதிலை வழங்க முடியாது என பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து ஜனாதிபதி அல்லது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரே தீர்மானிக்க வேண்டும் என நாம் அவர்களிடம் சுட்டிக்காட்டினோம்.

இன்று எமக்கு அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் கிடைத்து, அதில் சாதகமான தீர்வு எட்டப்பட்டால் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து பரிசீலிப்போம்-என்றார். (அ)

## சுற்றுலாத்துறை...

வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த முழுமையான அபிவிருத்தித் திட்டத்திற்காக சுமார் 2,667.03 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கும், பிராந்திய உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கும் இது வழிவகுக்கும்.

சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு அங்கமாக, யாழ்ப்பாண மாவட்டத்தின் சுற்றுலாத்துறை உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 131.02 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டிலான கருத்திட்டத்திற்குத் திட்டமிடல் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தித் திட்டம் 2026 ஆம் ஆண்டிலேயே நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## சி.ஐ.டி...

கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னரான சிறீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னனின் குண்டசாலை, உடவத்த தொல்பொருள் தளத்தில் அமைந்துள்ள அரண்மனை நுழைவாயிலுக்கு அருகில் இருந்த வரலாற்றுப் புகழ்மிக்க "சந்திரவட்டக்கல்" காணாமல் போனமை தொடர்பில் கையூட்டல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் திசைதிருப்பியமை, அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணைகளுக்குத் தடையாக இருந்தமை மற்றும் சந்தேக நபர்கள் சட்டத்தின் பிடியிலிருந்த தப்பிச் செல்ல உதவியமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் பிரசாத் ரணசிங்க மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தநிலையில், நேற்றுக் காலை 11:45 மணியளவில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பிரசாத் ரணசிங்க கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேக நபர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான், அவருக்கு பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். (அ)

## இலங்கையின்...

மைல்கள் மாத் திரமே ஆகும். அதற்கு அப்பால் காணப்படுவது பிரத்தியேக பொருளாதார வலயமாகும்.

அங்கு எமக்கு பொருளாதார உரிமைகள் மாத்திரமே உண்டு. சர்வதேச கப்பல் போக்குவரத்தைத் தடுக்கும் அதிகாரம் எமக்குக் கிடையாது.

தாக்குதலுக்கு உள்ளான ஈரான் கப்பலானது எமது 12 கடல் மைல் எல்லைக்கு அப்பாலேயே இருந்துள்ளது. எனவே, இந்தத் தாக்குதல் எமது நாட்டின் இறையாண்மைக்கு உட்பட்ட எல்லைக்குள் நிகழவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியும்.

அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் எமது பகுதிக்கு வந்ததை ஏன் கண்டறியவில்லை என எழுப்பப்படும் கேள்விகளில் அர்த்தமில்லை.

எம்மை விட அதிநவீன இராணுவத் தொழில்நுட்பங்களைக் கொண்ட வல்லரசு நாடுகள் போரிடும் போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எவ்வாறாயினும், எமது எல்லைக்குள் எவ்வித அத்துமீறலும் நடக்கவில்லை-என்றார். (அ)

## வடக்கில்...

கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த ஆளுநர், மணல் மாபியாக்களின் கட்டுப்பாடற்ற செயற்பாடுகளால் வடக்கு மாகாணத்தில் மணல் விலை கடுமையாக உயர்ந்து வருவதாகவும், இதனால் பொதுமக்கள் தங்களின் அன்றாட தேவைகளுக்குக் கூட மணலைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், திருகோணமலையிலிருந்து மணல் கொண்டு வருவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு நடைமுறையில் கிளிநொச்சியில் சட்டவிரோதமாக அகழப்படும் மணலை ஏற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரச நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் பெறுவதில் தாமதம் ஏற்படுகின்ற நிலையில், தனிநபர்களுக்கு உடனடியாக அனுமதிகள் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். எனவே மாவட்ட செயலாளர்கள் தலைமையில் விசேட குழுக்களை அமைத்து அவற்றின் ஊடாகவே இனி அனுமதிகளை வழங்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் சமன் ஜெயசிங்க, ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என தெரிவித்தார்.

மேலும், பணியகத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் முழுமையாக டிஜிற்றல் மயமாக்கப்பட்டு 2027ஆம் ஆண்டிலிருந்து அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில், மணல் அகழ்வு, சேமிப்பு மற்றும் விநியோக அனுமதிப்பத்திரங்கள் ஒரே நபர்கள் அல்லது குடும்பங்களுக்கே வழங்கப்படுவது உள்ளிட்ட பிரச்னைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஐந்து குளங்களில் மணலை கழுவி எடுத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக விநியோகிக்கும் திட்டமும் முன்மொழியப்பட்டது. (அ)

## 3 மாதங்களுக்குள்...

தலைவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் முறைமை மற்றும் சட்டத் திருத்தங்களை ஆராய நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு, எதிர்வரும் மே மாதத்துக்குள் (மூன்று மாத கால அவகாசம்) தனது விதப்புரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

குறித்த குழுவில் முன்னிலையாகி தேர்தல்கள் ஆணைக்குழு சார்பான யோசனைகளை முன்வைக்கவுள்ளோம். அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

எல்லை நிர்ணயப் பணிகள் முடியும் வரை பழைய விகிதாசார முறைமையிலாவது தேர்தலை நடத்தி, மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும் என்பதில் ஆணைக்குழு உறுதியாக உள்ளது.

தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், சட்ட ரீதியான அதிகாரங்களைப் பயன்படுத்தித் தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆணைக்குழு உடனடியாக ஆரம்பிக்கும். இதன் மூலம் நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டின் இறுதிக்குள் நடத்த முடியும்-என்றார். (அ)

## காலநிலைக்கு...

விவசாய முறைமை" எமது மாகாணத்துக்குத் தற்போதைய காலத்தின் கட்டாயத் தேவையாகும் எனவும், இப்புதிய பயிர்ச்செய்கை முறைமையினூடாக எமது விவசாயிகள் தமது வருமானத்தைப் பெருமளவு உயர்த்திக் கொள்ள முடியும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "காலநிலை சீர்மிகு விவசாய சமூகப் பண்ணை" நேற்று செவ்வாய்க்கிழமை மாலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகேயுடன் வடக்கு மாகாண ஆளுநரும் இணைந்து பண்ணையை ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளுநர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்-

எமது விவசாயிகள் காலகாலமாக "வானம் பார்த்து விவசாயம் செய்வதாகச்" சொல்வார்கள். அதாவது எந்தக் காலத்தில் மழை வரும் என்பதைக் கணித்து விவசாயம் செய்வார்கள். ஆனால், தற்போது அந்த நிலைமை முற்றாக மாறிவிட்டது. எப்போது மழை வரும், எப்போது புயல் வரும் என்பதைக் கணிக்க முடியாத நிலையில் உள்ளதால், விவசாயிகள் பெரும் அழிவுகளைச் சந்திக்கின்றார்கள். எனவே, இதிலிருந்து மீள்வதற்கும், தற்போதைய காலத்துக்கு ஏற்பத் தமது பயிர்ச்செய்கையை நவீனமயப்படுத்துவதற்கும் இவ்வாறான சமூகப் பண்ணைகள் மிகவும் அவசியமானவையாகும்.

எமது வடக்கு மாகாணம் மிகவும் வளமான நிலப்பரப்பைக் கொண்டது. ஆனால் வறுமை நிலையில் நாம் முதலிடத்தில் இருக்கின்றோம். எங்கள் விவசாயிகள் எவ்வளவுதான் கடினமாக விவசாயத்தில் ஈடுபட்டாலும், அவர்களால் பொருளாதார ரீதியில் வசதி படைத்தவர்களாக மாற முடியவில்லை. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நவீன முறையிலான பயிர்ச்செய்கை ஊடாக எமது விவசாயிகள் எதிர்காலத்தில் வசதியானவர்களாக மாறுவார்கள் என நான் திடமாக நம்புகின்றேன். அத்துடன், அவர்கள் தரமான விவசாய உற்பத்திகளை மேற்கொள்வதன் ஊடாக எதிர்காலத்தில் ஏற்றுமதி வாய்ப்புகளையும் பெற முடியும். எனவே, எங்கள் விவசாயிகளுக்கு இதுவொரு மிகச் சிறந்த வாய்ப்பாகும்-என்றார்.

இவ்விசேட நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், "தூய இலங்கை" செயலணியின் மாவட்ட இணைப்பாளர், கண்டாவளை பிரதேச செயலாளர், யு.என்.டி.பி. நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள், மாவட்டச் செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் எரிபொருள் விலை தற்போதும் குறைவான மட்டத்தில்!

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர விளக்கம்



கொழும்பு, மார்ச் 11

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ள போதிலும், இலங்கையில் எரிபொருள் விலையானது 2024ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியுடன் ஒப்பிடுகையில் தற்போதும் குறைவான மட்டத்திலேயே காணப்படுவதாக பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை திருத்தம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 85 டொலராக இருந்தபோது, இலங்கையில் ஒரு லீற்றர் 92 ரக பெற்றோல் 371 ரூபாவுக்கும், டீசல் 363 ரூபாவுக்கும், மண்ணெண்ணெய் 262 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது உலகளாவிய மோதல்கள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் காரணமாக மசகு எண்ணெய் விலை 100 டொலரைத் தாண்டியுள்ளது.

உலகளாவிய எரிசக்தி விநியோகப் பாதைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் சவாலான சூழலுக்கு மத்தியிலும், உள்நாட்டில் எரிபொருள் விலையை 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்த விலையை விடக் குறைவாகவே பேண முடிந்துள்ளதாகப் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உலக சந்தையில் ஏற்படும் மாற்றங்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் அழுத்தங்களை அரசாங்கம் உணர்ந்துள்ளதாகவும், எரிசக்தி விநியோகத்தில் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் அதே வேளை, நிலைமையை மிகவும் அவதானமாகக் கையாண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# சுகாதாரத்துறையில் ஏ.ஐ. தொழில்நுட்பம் அதிநவீன எம்.ஆர்.ஐ. ஸ்கானர் அறிமுகம்!

கொழும்பு, மார்ச் 11

இலங்கை தேசிய மருத்துவமனையில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்துடன் கூடிய அதிநவீன எம்.ஆர்.ஐ. இயந்திரம் உத்தியோகபூர்வமாக மக்கள் பயன்பாட்டிற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் இந்த இயந்திரம் நோயாளி பராமரிப்பு சேவைகளுடன் இணைக்கப்பட்டது.

450 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியைக் கொண்ட இந்த அதிநவீன எம்.ஆர்.ஐ. ஸ்கானர், தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் நரம்பியல் அறுவைச் சிகிச்சை பிரிவு ஆகியவற்றின் சிகிச்சை சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் நிறுவப்பட்டுள்ளது.

தேசிய மருத்துவமனையில் ஏற்கனவே பயன்பாட்டிலிருந்த மூன்று எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் கடந்த காலங்களில் அடிக்கடி செயலிழந்தமையால், நோயறிதல் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

புதிய அரசாங்கம் பதவியேற்றதையடுத்து, சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பிரதி சுகாதார அமைச் சர் ஹன்சக விஜேமுனி ஆகியோரின் ஆலோசனையின் பேரில், இந்த இயந்திரங்களின் செயற்பாட்டை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் விளைவாக, ஏற்கனவே இருந்த மூன்று எம்.ஆர்.ஐ. இயந்திரங்களும் தற்போது சீர்செய்யப்பட்டு இயங்கி வருவதுடன், புதிதாக நிறுவப்பட்ட ஏ.ஐ. தொழில்நுட்பம் கொண்ட இயந்திரம் வைத்தியசாலையின் நோயறிதல் திறனை மேலும் பலப்படுத்தியுள்ளது.

இலங்கையின் அரச சுகாதாரத்துறையில் ஏ.ஐ. தொழில்நுட்பம் புகுத்தப்பட்டமை ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

(அ)

# தேசிய வாய் சுகாதார கணக்கெடுப்பு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 11

இலங்கையின் 5ஆவது தேசிய வாய் சுகாதார கணக்கெடுப்பு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விசேட கணக்கெடுப்பு நடவடிக்கை நேற்று முதல் எதிர் வரும் நவம்பர் மாத இறுதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இக்கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இதன்போது தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் வீடுகளை மையமாக வைத்து தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

தேசிய வாய் சுகாதார கணக்கெடுப்பை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக, பாடசாலைகள் மற்றும் வீடுகளுக்கு வருகை தரும் எமது வைத்தியக் குழுவினருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு, தேசிய வாய் சுகாதார கணக்கெடுப்பின் பிரதான ஆய்வாளர் விசேட வைத்திய நிபுணர் நிலந்த ரத்நாயக்க பொது மக்களிடம் கேட்டுள்ளார்.

(அ)

# அமெரிக்கா - இஸ்ரேல் உறவை இலங்கை பாதுகாக்கவேண்டும்!

## வலியுறுத்துகின்றார் சம்பிக்க



கொழும்பு, மார்ச் 11

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது தோற்றம் பெற்றுள்ள நெருக்கடி நிலைமையால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுடனான உறவையும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய கிழக்கு நாடுகளில் தோற்றம் பெற்றுள்ள தற்போதைய நிலைமை முழு உலகுக்கும் தாக்கம் செலுத்தும். இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

நெருக்கடிக்குள்ளான ஈரானியர்களை பாதுகாக்க அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் எடுத்த தீர்மானத்தை வரவேற்கிறோம். ஈரான் இலங்கைக்கு பல்வேறு வழிகளில் உதவி செய்துள்ளது.

தற்போதைய நெருக்கடியான நிலையில் இலங்கை நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை முன்னிலைப்படுத்திச் செயற்படவேண்டும். அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான உறவையும் பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கொழும்பில் உள்ள ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய தூதரகங்கள் முன்பாக போராட்டத்தில் ஈடுபடுவதை அனைவரும் தவிர்த்துக் கொள்ளவேண்டும்-என்றார்.

(அ)

# சர்வதேச ரீதியில் இலங்கையை வேடிக்கை பொருளாக்கிய அரசு!

## பொதுஜன பெரமுன விமர்சனம்



கொழும்பு, மார்ச் 11

ஆங்கிலமொழி பேசத் தெரியாதது ஒரு வெட்கத்துக் குரிய விடயமல்ல என்றாலும், ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சர் என்பவர் தனிப்பட்ட ஒருவரை அல்லாது, முழு நாட்டையுமே சர்வதேச ரீதியில் பிரதிநிதித்துவப்படுத் துகிறார் என்பதை அவர் புரிந்துகொள்ளவேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டை மிக மோசமான நிலைக்குத் தள்ளிக்கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், அமைச்சரவை பதவியேற்ற நாளன்று திருடப்பட்ட 14 கடவுச்சீட்டுகள் தொடர்பான விசாரணை முதல், 323 கொள்கலன்களில் ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பாரிய மோசடி வரை பல ஊழல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகக் குற்றம் சாட்டினார்.

உள்நாட்டில் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் அழிப்பது மட்டுமன்றி, சர்வதேச ரீதியிலும் இலங்கையை இந்த அரசாங்கம் வேடிக்கைப் பொருளாக்கி வருவதாக அவர் சாடினார். சீன அதிபர் போன்ற உலகத் தலைவர்கள் தமது தாய்மொழியில் பேசி மொழிபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்துவது கௌரவமான விடயம் என்றும், ஆனால் ஆங்கிலம் தெரியாததைக் காட்டிலும் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்பை உணராதிருப்பதே வேதனையானது என்றும் அவர் கூறினார்.

(அ)

# ஈரான் கப்பலில் மீட்கப்பட்டவர்களை தாய்நாட்டுக்கு அனுப்பி வையுங்கள்!

## ரோஹித அபேகுணவர்த்தன வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 11

ஈரான் கப்பலில் இருந்து மீட்கப்பட்டவர்களை அரசாங்கம் யாருடைய அழுத்தங்களுக்கும் அடிபணியாமல், சர்வதேச சட்டத்துக்கமைய அவர்களின் தாய் நாட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஈரானின் இரண்டாவது கப்பலை பாதுகாத்து உயிர்களை பாதுகாப்பதற்கு எடுத்த நடவடிக்கைக்கு அரசாங்கத்துக்கு எமது கௌரவத்தை தெரிவித்துக்கொள்கிறோம். அரசாங்கம் செய்யும் நல்ல விடயங்களை நல்லது என தெரிவிப்பதற்கு நாங்கள் ஒருபோதும் [illegible] போவதில்லை.

கப்பலை பாதுகாக்க எடுத்த உறுதியான தீர்மானம், இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே எடுத்திருக்கிறார். அவ்வாறான தீர்மானங்களை எடுப்பதற்கு முதுகெலும்பு இருக்கும் தலைவர் இருக்கவேண்டும்.

அதேநேரம் ஈரான் கப்பலில் இருந்தவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததுபோன்று, யாருடைய அழுத்தங்களுக்கும் அடிபணியாது சர்வதேச சட்டங்களுக்கு அமைய அவர்களை அவர்களின் தாய் நாட்டுக்கு அனுப்புவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில் இந்த யுத்தத்தில் நாங்கள் யாருடைய பக்கத்தையும் எடுத்துக்கொள்ளாமல் நாங்கள் சுயாதீன நாடு என்பதை உலகுக்கு காட்டவேண்டும். வல்லரசு நாடுகளின் தலைவர்களுக்கு எப்போதும் பொறுமையுடன் செயற்படும் ஆற்றல் இருக்கவேண்டும்.

கடலில் இருந்த ஈரான் கப்பலை தாக்காமல் அமெரிக்காவுக்கு அதனை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, கைப்பற்றி இருக்கலாம். அதுதான் வல்லரசு நாடுகளின் தலைவர்களின் நடவடிக்கையாக இருந்திருக்கவேண்டும்.

ஆனால் இன்று எங்களுக்கு மனித உரிமை தொடர்பில் கற்றுத் தரும் இவர்கள்தான் அப்பாவி உயிர்களை போக்கி இருக்கிறார்கள் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.